<u>சுருக்கம்</u>

தொழில்நுட்பக் கல்வி – பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் – பட்டயத் தேர்வு – பட்டயப் படிப்பு முடித்து, நிலுவைப் பாடங்களில் தேர்ச்சி பெறுவதற்கு, தேர்வு எழுத வழங்கப்பட்ட வாய்ப்புகளை முடித்து, தேர்ச்சி பெறாமல் நிலுவைப் பாடங்கள் வைத்துள்ள மாணாக்கர்களுக்கு 2021 மற்றும் 2022–ஆம் ஆண்டுகளில் நடைபெறும் பருவத்தேர்வுகளின் போது மட்டும் தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) மற்றும் தேர்வுக்கட்டணம் நிர்ணயம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வி (பி1) துறை**

அரசாணை (நிலை) எண். 157

நாள்: 10.08.2021.
சார்வரி வருடம், ஆடி 25,
திருவள்ளுவர் ஆண்டு 2052.
படிக்கப்பட்டவை :

1. அரசாணை (டி) எண். 153, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 12.06.2019
2. அரசாணை (நிலை) எண்.165, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 17.11.2020.
3. தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரிய தலைவரின் கடித எண். 108069 / எம்–1 / 2020, நாள் 17.06.2021.

-----

<u>**ஆணை:**</u>

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பல்வேறு பாடத் திட்டங்களில் பட்டயக் கல்வியை முடித்து நிலுவைப் பாடங்களில் தேர்ச்சி பெறாமல் உள்ள முன்னாள் மாணாக்கர்களுக்கு அக்டோபர் 2019 மற்றும் ஏப்ரல் 2020–ல் தேர்வு எழுத வாய்ப்பளிக்கப்பட்டது. மேலும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அக்டோபர் 2019–ல் கூடுதல் வாய்ப்பு முடித்த மாணாக்கர்களுக்கும், ஏப்ரல் 2020–ல் தேர்வு எழுத இயலாத மற்றும் தேர்ச்சி பெறாத மாணாக்கர்களுக்கும் சிறப்பு வாய்ப்பாக டிசம்பர் 2020–ல் நடந்த தேர்வில் தேர்வு எழுத வாய்ப்பு வழங்கப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரிய தலைவர், மேற்காணும் அரசாணைகளின்படி வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும், மாணாக்கர்கள் கோவிட்–19 நோய்த் தொற்று காரணமாக தேர்வு கட்டணம் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் தேர்வு கட்டணம் செலுத்த கல்லூரிக்கு வர இயலாத சூழ்நிலை இருந்தது. எனவே, அவ்வரசாணைகளின்படி சிறப்பு அனுமதி வழங்கப்பட்டு, தேர்ச்சி பெறாத மாணாக்கர்களுக்கும், அவ்வாய்ப்பில் தேர்வு கட்டணம் செலுத்தத் தவறிய மாணாக்கர்களுக்கும், மேலும் அக்டோபர் 2020–ல் கூடுதல் தேர்வு எழுத வாய்ப்பு முடிந்த மாணாக்கர்களுக்கும் எதிர் வரும் நான்கு வாரிய பருவத்தேர்வுகளின் போது மட்டும் தேர்வு எழுத

. . . 2

சிறப்பு வாய்ப்பு (Grace Chance) வழங்குமாறும், அச்சிறப்பு வாய்ப்பின்போது தேர்வுக் கட்டணம் மற்றும் பதிவுக்கட்டணம் நிர்ணயிப்பது தொடர்பாக ஆணை வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட தொழில்நுட்ப கல்வி இயக்கக தேர்வு வாரிய தலைவரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மாணக்கர்களின் நலன் கருதி, பின்வருமாறு ஆணை வெளியிடுகிறது:-

(i) மேலே ஒன்றாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளின்படி சிறப்பு வாய்ப்பு வழங்கப்பட்டு தேர்ச்சி பெறாத மாணாக்கர்களுக்கும், அவ்வாய்ப்பில் தேர்வு கட்டணம் செலுத்தத் தவறிய மாணாக்கர்களுக்கும், 2021 மற்றும் 2022–ஆம் ஆண்டுகளில் நடைபெறும் பருவத்தேர்வுகளின் போது மட்டும் தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) வழங்கப்படுகிறது.

(ii) சிறப்பு வாய்ப்பு அடிப்படையில் பட்டயத் தேர்வு எழுதும் மாணாக்கர்கள், அவர்கள் வைத்துள்ள நிலுவைப் பாடங்கள் அனைத்திற்கும் தேர்வுக் கட்டணம் செலுத்தாமல், அவர்கள் தேர்வு எழுத விரும்பும் நிலுவைப் பாடங்களுக்கு மட்டும் தேர்வு கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. அத்துடன், ஒரு தாளிற்கு ரூ.65/– தேர்வுக்கட்டணமாக நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் ஒவ்வொரு சிறப்பு வாய்ப்புக்கும் பதிவுக் கட்டணமாக ரூ.750/– வசூலிக்கவும் தொழில்நுட்ப கல்வி இயக்கக தேர்வு வாரிய தலைவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு
வாரியத் தலைவர், சென்னை – 25.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

<u>நகல்:</u>
உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் துறை, முதன்மைச் செயலாளர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

10.8.2021
பிரிவு அலுவலர்